கின்ற ஊதியத்தின் அடிப்படையில், நிதி ஆதாரத்தைப் பார்க்காமல் குறைந்தது 250 ரூபாயாவது அவர்களுடைய தேவையின் அடிப்படையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல் அவர்களுடைய ஊதிய நிர்ணயத்தை அங்கே இருக்கின்ற துணை விதியிலே தனித் தன்மை இருக்கின்ற காரணத்தினால், அந்த அடிப்படையிலே தான் இந்த ஊதிய நிர்ணயம் செய்யப் படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன.

கலைவாணர் அரங்கம்.

குறுகிய கால வினா எண் 54— திரு. கே. பண்ணை சேதுராம் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலைவாணர் அரங்கத்தில் கடந்த 1976-ம் ஆண்டுக்கு முன் அதன் ஆண்டு வரவு செலவு எவ்வளவு? 1976-க்குப்பின் அதன் வரவு செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கலைவாணர் அரங்கத்தில் 1976-ம் ஆண்டுக்கு முன்னும் பின்னும் அதன் ஆண்டு வரவு செலவு கீழே தரப்பட்டுள்ளது.

நிதி ஆண்டு.		வரவு.	செலவு.
		ரூ.	ரூ.
1974-75	..	3,02,096·00	2,96,537·00
1975-76	..	3,92,642·00	3,45,389·00
1976-77	..	4,94,716·00	5,41,520·00
1977-78	..	6,05,166·00	5,95,608·00
1978-79	..	7,46,789·00	4,85,693·00

1979 ஏப்ரல் 24]

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரைக்கும் படிப்படியாக வரவு அதிகமாகிக் கொண்டு வந்திருக்கின்றது. 1974ஆம் ஆண்டு 1975 ஆம் ஆண்டுகளில் இந்த வரவு மூன்று இலட்சம் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்? அதோடு, இந்திப் படங்களோ அல்லது இந்தி நிகழ்ச்சிகளோ இந்த கலை அரங்கில் நடத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1974, 1975 ஆண்டுகளில் ஏன் வரவு குறைந்திருக்கின்றது என்ற காரணத்தை இந்த அரசு சொல்ல முடியாது. அதற்குப்பிறகு தான் நிர்வாகத்தைச் சீரமைக்கின்றமுறையிலே சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கட்டணமும் மாற்றப்பட்டிருக்கிறது. அதனால் கடந்த ஆண்டு ரூ. 7,46,789 வரவு வந்திருக்கிறது. ரூ. 4,85,693 செலவுஏற்பட்டு லாபத்தை அடைந்திருக்கிறது. அதைத் தவிர, இந்தி படங்கள் முன்னாலே திரையிட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது இந்தி படங்களுக்கு திரையிட நிறைய அரங்குகள் இருக்கின்ற காரணத்தாலும், இது குழந்தைகள் திரைப்படத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலும், கூடுமானவரை முதலில் தமிழ்ப் படங்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்ற நிகழ்ச்சிகள், இந்தி நிகழ்ச்சியா, தமிழ் நிகழ்ச்சியா என்றில்லாமல், எல்லா சமூக நிகழ்ச்சிகளையும் நிகழ்த்துகின்ற முறையிலே ஒதுக்கப்படுகின்றது.

வடாற்காடு மாவட்டத்தில் காகித தொழிற்சாலை.

*வினா எண். 784— திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப்பகுதியில் விளைகின்ற மூங்கிலை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு காகித தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், ஜவ்வாது மலையில் ஏராளமாகக்கிடைக்கின்ற மூங்கிலைக் கொண்டு பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?